தினமணி

சனிக்கிழமை
3 மார்ச் 2018
திருநெல்வேலி
14 பக்கங்கள் ரூ.5

# ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரியில் மாணவர் பேரவை நிறைவு விழா




அரியகுளம் ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில் பேசுகிறார் இல. கணேசன் எம்.பி.

**திருநெல்வேலி, மார்ச் 2:** பாளையங்கோட்டை அரியகுளம் ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரியில் 30 ஆவது ஒளியேற்றும் விழா, மாணவர் பேரவை நிறைவு விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இவ்விழாவுக்கு, திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்தின் தலைவர் ஸ்ரீமத் சதானந்த சுவாமிகள் தலைமை வகித்தார். ஸ்ரீமத் சுத்தானந்த சுவாமிகள், ஸ்ரீமத் சத்தியானந்த சுவாமிகள், கல்லூரி நிர்வாகி ஸ்ரீமத் பக்தானந்த சுவாமிகள், செயலர் யதீஸ்வரி சரவணபவப் பிரியா, யதீஸ்வரி துர்காபிரியா, யதீஸ்வரி தவப்பிரியா ஆகியோர் ஆசியுரை வழங்கினர். சிறப்பு விருந்தினராக இல. கணேசன் எம்.பி. பங்கேற்றுப் பேசினார். ராமாயணம் குறித்து பிரியா சந்தானகிருஷ்ணன் பேசினார். கல்வி ஆலோசகர் சந்திரசேகரன் உள்பட பலர் வாழ்த்திப் பேசினர். மாணவிகள் உறுதிமொழி எடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆளுமை வளர்ச்சித் திறன் சான்று வழங்கப்பட்டது.

மாணவர் பேரவை நிர்வாகி தி. லோகசக்தி அறிக்கை வாசித்தார். முதல்வர் மு. மலர்விழி வரவேற்றார். மாணவர் பேரவைத் தலைவர் கு. லட்சுமி நன்றி கூறினார்.